


# திகம்பர சாமியார்

## அலங்காரம்

எப்போதும் இந்தக் கேலிப் பேச்சு—உன் தொழிலாச்சு
போதும் நீ—ஓடி எடுத்து வா போடி
போயேண்டி—ஐயா வரும் நேரமாச்சு!
வாசனைப் பவுடர் ஸ்நோ ரெண்டும்—உயர்வான
ஈவினிங் பாரிஸ் செண்டும்! இப்போது வேண்டும்!
ஓடி எடுத்துவா போடி போயண்டி—ஐயா வரும் நேரமாச்சு!
காசிப் பட்டாடையும், ஜாக்கெட்டும் காசு மாலையும்,
வைர நெக்லெஸுடன், ஒட்டியாணம் வங்கியும,
வடுத்து வாடி யதி சீக்கிரம்!
என்னடி சுப்பி ரோஜாப்பூவும்
எங்கேடி காணும்?—சீக்கிரம் ஓடி எடுத்துவா போடி
போயேண்டி—ஐயாவரும் நேரமாச்சு!

## வண்டிக்காரப் பையன்

ஆண்:-வாழப்பிறந்தவர் நாமே—உலகிலே
வாழப்பிறந்தவர் நாமே!
வட்டமிட்டு வட்டமிட்டு வயல் வெளியிலே
வளரும் ஏர் உழுவோமே! (வாழ)
பெண்:-மிக்க வெயிலாலே வேதனைப் படாமே
நிக்க நிழலும் இங்கேகாணுமே
ஆண்:-மரம் வேணுமே!—வேணுமே!
பெண்:-அக்கம் பக்கமெல்லாம் மிக்க அழகா
ஆல் அரசு வேம்பு வைக்க வேணுமே!
ஆண்:-ஆமா வேணுமே!—வேணுமே!
பெண்:-வெட்டித் தள்ளாமலே, பட்டுப்போகாமலே;
ஆண்:-வேலிகட்டிக் காத்து காப்பாத்தினலே,
விளையும் பயிர் மழையாலே!
விளையும் பயிர் மழையாலே உலகிலே (வாழ)
நாட்டுக்குத் தேவையான பொருள்களை
நாமே பயிர் செய்யலாகுமே!
பெண்:-வீட்டுக்கு வீடு ஆணும் பெண்ணுமாய்
பாடுபட்டாலே நலம் ஆகும்!
ஆண்:-எட்டும் சொரக்காய் கறிக்குதவா!
பெண்:-எல்லோரும் ஒன்ரும் சோவதெப்போது?
நமக்குள் ஒற்றுமை தானே இருந்தால்
ஆண்:-நன்மை பெருகிடுமாமோ!
பெண்:-நன்மை பெருகிடுமாமே—உலகிலே (வாழ)

சந்திரா

சங்:-ஊசிப் பட்டாசே வேடிக்கையா தீ வைச்சாலே
தாத்:-வெடி டபார் டபார்!
சங்:-வேடிப் பட்டாசே வேடிக்கைய தீ வைச்சாலே
தாத்:-வெடி டபார் டபார்!
சங்:-பீரங்கி போலே சீரங்கி வெடியை வச்சாலே
தாத்:-வெடி டபார் டபார்!
சங்:-அடடா யானை வெடி இதனாலே
சுடுவேனே உன்னை தாத்தா!
தாத்:-ஆமாமா நிஜமா சுட்டுப போடாதே
கோமாளித்தனமா கொளுத்திப் போடாதே
சங்:-சீறியே பாம்பாய் மாறிடுமாம் தீ வச்சாலே
தாத்:-வெகு தமசஷ் தமாஷ்!
சங்:-ஏரோப்ளேனாய் போகுமாம் மேலே இது தானே
தாத்:-பேஷ் பலே பலே!
சங்:-புதுசா இன்னும் மத்தாப்பு வாங்க
தரவேணும் பணம் தாத்தா!
தாத்:-தாரேண்டி கண்ணு நாளைக்கு காசு
தாராளமாக பூவாணம் வாங்கு!
சங்- ஊசிப் பட்டாசே வேடிக்கையா தீ வைச்சாலே
வெடி டபார் டபார்!

லலிதா பத்மினி டான்ஸ்

பெண் பக்கம்] மாப்பிள்ளை பார்!
அசல் சோளக்கொலலை பொம்மை மாதிரியாய்
வந்து வாச்சாரே கூத்தாடும் கோமாளியாய்-இந்த(மா)
ஆ......தேவாரம் பாடு என்றே சொன்னால்
தாவாரம் போவார்!
தெண்ணையை பார் என்றால்
தொன்னையைப் பார்ப்பார்
திண்ணைக்குத் திண்ணை தூங்குவார்!
நன்றாகத் தூங்குவார்!
சோம்பேறி இவரை, கொண்டுவந்தார்களே
மாப்பிள்ளையாய்—கோணல் மூஞ்சியை!

ஆண் பக்கம்] ஆ...காக்கையாய்ப் போல் ஒரக்கண்ணி தானே
பார் உங்கள் பெண்ணே!
கருநாகப் பழம் போலே நிறம் உங்கள் பெண்ணே
வீணே சண்டை போடுவாள்! அன்றாடம் போடுவாள்!

வாயாடி இவளை; கொண்டு வந்தார்களே
சூர்ப்பண்ணகவே பட்டிக் காட்டையே!
பெண்: கொய்யா பழம் எங்க பொண்ணு
கோணங்கி மாப்பிள்ளை வாச்சுதே!
ஆண்: சிங்கக்குட்டி மாப்பிள்ளைக்கே
இந்த அழுமூஞ்சிப் பெண் வாச்சுதே!
பெண்: எல்லோரும் போகும் வண்டி கோச்சு வண்டி!
அழகு சைக்கிள் வண்டி அருமை மோட்டார் வண்டி!
இந்தப் பிள்ளை போகும் வண்டி பழையகுப்பைவண்டியே!
ஆண்: எல்லோரும் சூடுவது அழகுள்ள ரோஜாப்பூவே!
இனிய வாசம் தருமம் மருவுடன் மல்லிகையே!
இந்தப் பெண்ணுசூடுவது வெள்ளருக்கம் பூவைத்தான்!
பெண்: ராஜாத்தி போல பெண்ணுக்கே தானே
கூஜாவைத் தூக்கிடும் மாப்பிள்ளை வாச்சுதே!
ஆண்: ராஜாவைப்போலவே பெண் வந்து வாச்சதே
மூன்சூறு பேலேவே பெண் வந்து வாச்சுதே!

வடிவாம்பாள்

தொகையரு

வாழ்வில் தானே மனமபோல் யாவும் அடைவேனோ நானுமே?
அன்றி—வாடிடும் மலராகவே வீணே ஆவேனோ? உலகினிலே!

(பாட்டு)

ஆ.........வாழ்வில் தானே.........
வாழ்வில் தானே யாவும் மனம் போல்
ஆகி சுகமே காண்பேனோ?
அன்றி நானே யாவு மிழந்து சீரழிந்தே போவேனோ?
வீணே அழிந்து போவேனோ?
என் வாழ்வில் தானே...
மாசு உடையது ஆகுமோ வான்மீதே காணும் மாமதி!
யாரும் அதனுல் தீதென்றே இழிவாக அதையே பேசிடார்!
நானுமே அதுபோல் மாசுதான் உடையாள்
என்ருலும் நானே சுகமே காண்பேனோ?
அன்றி வாழ்வில் யாவுமிழந்து சீரழிந்தே போவேனோ?
வீணே அழிந்தே போவேனோ? (வாழ்வில்)

வண்டிக்காரப் பையன்

(தொகையரு)

மனம்போல வாழ்வு வரும் என்ற பெரியோர்
வாக்கியம் பொய்யாகுமா?

மனிதனை மனிதன் வதைத்தே பிழைத்திடும்
வாழ்வுதான் நிலையாகுமா—நிலையாகுமா?

(பாட்டு)

சன்மார்க்கம் தியாகம்
எந்நாளும் வெற்றி அடையும் பாரினிலே
துன்மார்க்கம் துரோகம்
எந்நாளும் தோல்வி அடையும்—பாரிலே—தோல்வி
அடையும் பாரிலே
முனம் ராவணன் என்றொரு கொடியன்
தென் இலங்கையை ஆண்டானே
ஸ்ரீ ராமபிரான் கை அம்பால் அந்த
ராவணன் மாண்டானே (சன்)
அக்ரமத்தால் உலகாள நினைத்தார் ஹிட்லர் முசோலினி
அணுகுண்டாலே அவர்களை அழித்தார்
அருமை விஞ்ஞானி (சன்)

வடிவாம்பாள்

(தொகையறு)

கானகத்தே குகை நடுவே
மானொன்று புலியிடத்தில் அகப்பட்டாற்போல்
நானுமிங்கே நாவிகின்றேனே

(பாட்டு)

ஏனிந்த பெண் ஜன்மம் எடுத்தேன் ஜெமதியா?
பெருங்கடலில்சூறைக்காற்றில்அலைமோதும்தோணிபோலே
கரை சேரும் மார்க்கம் காணாது கதி கலங்குகின்றேன்!
என் எண்ணம் யாவும் பாழடைந்து மண்ணும் ஆகுமோ?

மாசிலாமணி

கண்ணுதவி பூவே என் காதலியே வா வா!
எண்ணி எண்ணி நானே தினம் ஏங்கியே நொந்தேனே-சா
சாங்கியே செந்தேனே!
விட்டிடுவேனோ நானே எட்ட ஓடினாலும்?

(தொகையறு)

வெட்கம் விடுவாயே-இனி வேமுவேனோ மானே?
விரும்பியே மணம் செய்திடப்போகும்-ஒ

(பாட்டு)

சிங்கமடி நானே! என் தங்கமடி நீயே!

அண்ணு ஒரு பைத்தியமா ஆயிடிச்சு அண்ணிமேல்
சொக்கி சொக்கி! ஓ அண்ணு சொக்கி சொக்கி!
தூங்காமல் அண்ணுவையே சுத்திச சுத்தி ஓடுருளே
மக்கு மக்கு!—ஓ அண்ணி! மக்கு மக்கு!
எங்க வீட்டு ராஜாவே எங்கிருந்தோ ராணி வந்து
இழுத்து வளேச்சுக் கிட்டா பாத்தியா
இனி ரெட்டை மாட்டு வண்டியாச்சு கேட்டியா
வேளைக்கு நீ வீடுவந்து ஆகணுங்—சொந்த
வேலையெலலாம் முட்டை கட்டிப் போடணும்
நாளுக்கொரு வேட்டி சட்டை மாத்தணும்—நட
ராஜா போல் நனட நடந்து காட்டணும்!
டக் டக் டக் டக் டக் டக் டக் டக் (அண்ணு)
ஒண்ணேடெ ஒண்ணு இங்கே ரெண்டாச்சு—இந்த
ரெண்டோட ஒண்ணு வந்து மூணுகும்
அண்ணியோடே நீ தனியா பேசுவே
அந்தப் பையன் குடு குடுண்ணு ஓடுவான்
அப்ப என்னே நீயும் ஏறெடுத்துப் பாப்பியா?
என பாட்டையுந்தான் சகிச்சுக் கேப்பியா[ (அண்ணு)

செம்படவர் நடனம் லலிதா பத்மினி ராகினி

1

செம்படவன்:] காக்கவேண்டும் கடவுளே—நீ
செம்படச்சி கருணைசெய்யட்—ஐய்யப்பா!
செம்படவன்: கடலேத்தாண்டி படகிலேறி
போக வேண்டும்—ஐயப்பா!
செம்படச்சி: புள்ளே குட்டி வயர் பொழைக்க
பொழப்பே காட்டப்பா ஐயப்பா!

2

செம்படச்சி: மீனு! மீனு! ஓ ஐயா மாரே
ஓ அம்மா மாரே! மீனு! மீனு!
கொழுப்புக் கேத்த கொடுவா மீனு!
கொடுத்து வச்சவர் வாங்கு மீனு!
வாய்க்கு ருசியா வருவல் செய்ய
வெளவா மீனு!—வஞ்சனே மீனு!
வாளே மீனு வாங்கிப் பாருங்கோ
ஓ ஐயா மாரே!
ரௌடி: வாளே மீனு விக்கவந்த வாலே வயசுப்பெண்ணே
வருமா? வருமா? ரொம்ப சரசமாகத்தானே!
விலேக்கு இது வருமா ரொம்ப சரசமாகத்தானே!

செம்படச்சி: ஆ......என்ன சொன்னே? என்னை நீயும்
யாரின்னுதான் நெனச்சே!
போய்யா நீ போய்யா ஒன் ஒடம்பு பத்திரம் ஆமா
சும்மா போய்யா! ஒன் ஒடம்பு மத்திரம் ஆமா

ரௌடி: பொண்ணே என்னை மொட்டினதால்
போயிடுவேன்னு நெனச்சே?

செம்படச்சி: கன்னு பின்னு இன்னு எங்கிட்ட
பேசாதடா கயிதே

3

செம்படவன்: மீனு விக்கப்போன சிறுக்கி வீடு திரும்பலே
வெளக்கு வக்கிற நேரமாச்சு வெஷயம் புரியலே!
வீட்டுலே ஆம்பளே இருக்கானேன்னு
பயமிருந்தாக்கா—இப்படி
வெளியே போயி வெகு நேரமா தாமசிப்பாவா?
வரட்டும் இன்னிக்கு ரெண்டுலே ஒண்ணு:
பாத்துப்பிட்றேன் நான்!

செம்படவன்: என்ன பொண்ணே இந்நேரம் நீ
எங்கிட்டு சுத்தப் போயிருந்தே ஒண்ணும் புரியலே
ஒண்ணும் புரியல்லே எனக்கு ஒண்ணும் புரியலே
பூசை—எண்ணைக்கி எங்கிட்டே
வாங்கப்போறியோ தெரியல்லே!

செம்படச்சி: பொண்ணு பொறந்த தென்னேரமோ
ஒன்னோட நான் படுற பாடு சகிக்கல்லே
நெஜமா சகிக்கல்லே! கொஞ்சங்கூட சகிக்கல்லே!
சும்மா—பூச்சாண்டி நீ கட்டாதே
ஒண்ணும் புடிக்கல்லே!

செம்படவன்: கூடையை தலையில் வச்சிகிறே—சும்மா
கும்மாளம் போட்டு நடந்துக்கறே!
ஜாடையா பாக்குறே! தளுக்குப் பண்ணுறே!
குலுக்குறே! நல்லாமினுக்குறே!
சும்மா நெளிககிறே! பல்லே யிளிக்கிறே

செம்படச்சி: கண்டவன் பேச்சையும் கேட்டுக்கறே!
காலா டித்தனமா நடக்கறே!
கண்டபடி யெல்லாம் ஏசுறே! பேசுறே!
அடிக்கிறே! பல்லேக் கடிக்கிறே!
என்னை ஒதைக்குறே! போட்டு மிதிக்கறே!

செம்படவன்: கடவுள் ஆணை இனி ஒன்னெ
நாங் கண்டபடி பேசமாட்டேன் பெண்ணே!

## நடிகர்கள்:

எம். என். நம்பியார் — திகம்பர சாமியார்
நரசிம்ம பாரதி — கண்ணப்பா
டி. பாலசுப்ரமண்யம் — சட்டநாத பிள்ளை
எம். ஜி. சக்ரபாணி — பட்டாபிராம பிள்ளை
ஆழ்வார் குப்புசாமி — சுந்தரம் பிள்ளை
வி. கே. ராமசாமி — வேலாயுதம் பிள்ளை
எம். ஏ. கணபதி — நடராஜ பிள்ளை
ஆர் சீனிவாசகோபால் — ஜட்ஜ்
டி. கே. ராமச்சந்திரன் — மாசிலாமணி
எஸ். எம். திருப்பதி — சண்டமாருதம்
சிவசூரியன் — நமசிவாயம் பிள்ளை
வி. எம். ஏழுமலை — வண்டிக்காரன்
கருணாநிதி — மாணிக்கம்
மாஸ்டர் சுப்பையா — வண்டிக்காரன்

## நடிகைகள்:

எம். எஸ். திரௌபதி — வடிவாம்பாள்
சி. கே. சரஸ்வதி — அஞ்சலை
லக்ஷ்மிபிரபா — அலங்காரம்
கே. டி. தனலக்ஷ்மி — சிவக்கொழுந்து
ஜெயலக்ஷ்மி — சுப்பி
பேபி லலிதா — சந்திரா
குமாரி கமலா — துரைக்கண்ணு

**நடனம்—லலிதா - பத்மினி, குமாரி கமலா**

இசையமைப்பு

**ஜி. ராமநாதன் & எஸ். எம். சுப்பையா நாயுடு**

பின்னணி இசை:
கே. வி. ஜானகி
பி. லீலா
பி. ஜி கிருஷ்ணவேணி
யு. ஆர். சந்திரா
ஆர். கெஜலக்ஷ்மி
ஏ. பி. கோமளம்

பாடல்கள்:
அ. மருதகாசி
கா. மு. ஷரீப்
கே. பி. காமாக்ஷி
ராமையாதாஸ்
கண்ணதாசன்
ரத்னமாலா